# இரட்டை இலக்கத்தில் பொருளாதார வளர்ச்சி!

## நிதிநிலை அறிக்கை!... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

82. திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் ஓசூர் ஆகிய இடங்களில் மொத்தம் 1070 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய டைடல் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. மேலும், விழுப்புரம், தஞ்சாவூர், சேலம். தூத்துக்குடி. திருப்பூர். வேலூர் மற்றும் காரைக்குடி ஆகிய இடங்களில் டைடல் நியோ மினி தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் திறக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமன்றி, நாமக்கல், திருவண்ணாமலை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு. நாகப்பட்டினம், கரூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் மொத்தம் 388 கோடி ரூபாய் செலவில் மினி தகவல் தொழில்நுட்பப் பூங்காக்கள் நிறுவப்பட்டு வருகின்றன. தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சியை பரவலான முறையில் விரிவுபடுத்துவதன் மூலம். தமிழ்நாடு முழுவதும் 25,500 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

83. **'தமிழ்நாடு செமிகண்டக்டர் இயக்கம் 2030'** எதிர்வரும் ஐந்தாண்டுகளுக்கான செயல் திட்டத்தின் அடிப்படையில், 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடைமுறைப்படுத்தப்படும். மேலும், இந்திய தொழில்நுட்பக் கழகம், சென்னை (IIT Madras) உடன் இணைந்து சென்னை தரமணி பகுதியில், மேம்பட்ட செமிகண்டக்டர் தொழில்நுட்ப மையம் (Centre for Advanced Semiconductor Technologies) மற்றும் செமிகண்டக்டர் வடிவமைப்பு மற்றும் சோதனைக் கட்டமைப்பு மேம்பாட்டுக்கான திறன்மிகு மையம் (Centre of Excellence) அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

84. கப்பல் கட்டுமானம் மற்றும் கப்பல் இயந்திர உற்பத்தித் துறைகளில் முதலீடுகளை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட **'தமிழ்நாடு கப்பல் கட்டும் கொள்கை'** விரைவில் வெளியிடப்படும்போது. கப்பல் கட்டும் தொழிலில் ஒரு உலகளாவிய மையமாக தமிழ்நாடு உருவெடுக்கும். சிப்காட் நிறுவனம் வ.உசிதம்பரனார் (VOC) துறைமுக ஆணையத்துடன் இணைந்து, ஒரு சிறப்பு நோக்க நிறுவனம் (SPV) மூலம் தூத்துக்குடியில் 5,200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய கப்பல் கட்டும் தொகுப்பினை நிறுவி வருகிறது. கூடுதலாக, ஒன்றிய அரசின் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் ஒரு உலகளாவிய முன்னணி கப்பல் கட்டும் நிறுவனம் உள்ளிட்ட முன்னணி கப்பல் கட்டும் நிறுவனங்களுடன் சுமார் 30,000 கோடி ரூபாய் மதிப்புள்ள உறுதியான முதலீட்டுப் பொறுப்புறுதியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறைக்கு 4,282 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

85. நாட்டிலேயே குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையில், தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. மொத்தம் 40 இலட்சத்திற்கும் மேற்பட்ட பதிவு பெற்ற குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் அமையப்பெற்றுள்ள நமது மாநிலத்தில், கடந்த ஐந்து வருட காலத்தில் வங்கிகள் மூலம் 10.70 இலட்சம் கோடி ரூபாய் வங்கிக்கடன் வழங்கப்பட்டுள்ளது. மாநிலம் முழுவதும் உள்ள குறு. சிறு மற்றும் நடுத்தரத் தொழில்முனைவோர்கள் பயன்பெறும் வகையில், கடந்த ஐந்தாண்டு காலத்தில் 18 புதிய தொழிற்பேட்டைகள் தமிழ்நாடு சிறு தொழில் முன்னேற்றக் கழகத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், 3.735 புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

86. இருபத்தைந்து வகையான கைவினைத் தொழில்களில் ஈடுபடும் கைவினைஞர்களுக்கு நிதியுதவி, திறன் பயிற்சி மற்றும் அவர்களின் வளர்ச்சிக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கும் நோக்கில் துவங்கப்பட்ட **'கலைஞர் கைவினைத் திட்டத்தின்'** கீழ், இதுவரை 405 கோடி ரூபாய் கடன் உதவி மற்றும் 83 கோடி ரூபாய்மானியம் பெற்றுத் தர 23.879 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் தரப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தில், தங்கநகைப் பூங்காவின் முதற்கட்டப் பணிகள் 81 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

87. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள். தங்களின் சேவைக்கான தொகையினை விரைந்து பெறும் வகையில் **தமிழ்நாடு வர்த்தக வரவுகள் தள்ளுபடி முறை (TN TreDS)** எனும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 5,171 கோடி ரூபாய் அளவிற்கு 1461 தொழில் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன.

### புத்தொழில் வளர்ச்சி

88. புத்தொழில் நிறுவனங்களின் வளர்ச்சியில், தமிழ்நாடு வியத்தகுபல சாதனைகளை புரிந்துள்ளது. கடந்த ஐந்தாண்டுகளில், தமிழ்நாட்டில் பதிவு செய்யப்பட்ட புத்தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை ஐந்து மடங்கு உயர்ந்து. பதிமூன்றாயிரத்தையும் விஞ்சி மேலும் உயர்ந்து வருகிறது. அண்மையில், கோயம்புத்தூரில் நடைபெற்ற உலக புத்தொழில் மாநாட்டில், உலகெங்கும் இருந்து 150 க்கும் மேற்பட்ட முன்னணி நிறுவனங்கள் பங்கேற்று, அம்மாநாடு மாபெரும் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. **தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்தின்** மூலமாக, **'தமிழ்நாடு புத்தொழில் ஆதார நிதி**, **'விண்வெளி தொழில்நுட்ப நிதி'** ஆகிய முக்கியமான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. **'இணை உருவாக்க நிதியம்' (Fund of Funds)** ஏற்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைக்கு 1,943 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### தகவல் தொழில்நுட்பம்

89. தகவல் தொழில்நுட்பத் துறையில், தமிழ்நாடு பரவலான வளர்ச்சி பெறுவதை நமது அரசு உறுதி செய்து வருகிறது. ஆண்டுதோறும் 25 இலட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக தகவல் தொழில்நுட்பம் சார்ந்த ஏற்றுமதியுடன், மாநிலம் முழுவதும் பல இலட்சம் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பை வழங்கி வரும் பெரும் துறையாக தகவல் தொழில்நுட்பத் துறை திகழ்கிறது. 250க்கும் மேற்பட்ட **'உலகளாவிய திறன் மையங்கள்' (GCCs)** இயங்கி வரும் சென்னை, இந்தியாவின் முன்னணி மையங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ள நிலையில், கோவை, மதுரை, திருச்சி உள்ளிட்ட நகரங்களும் இந்த வளர்ச்சி வேகத்திற்கு அதிகமாக பங்களித்து வருகின்றன.

90. ஒன்றிய அரசின் மென்பொருள் தொழில்நுட்பப் பூங்காக்கள் (STPI) நிறுவனம் வெளியிட்ட தகவலின்படி, 2024-25 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் மொத்தமுள்ள 38 மாவட்டங்களில், 32 மாவட்டங்களிலிருந்து தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி பதிவாகியுள்ளது. இதன் மூலம், தமிழ்நாட்டில் தகவல் தொழில்நுட்பத் துறை மாநிலமெங்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்கி. பரவலான வளர்ச்சியைப் பெற்றுள்ளது தெளிவாக வெளிப்படுகிறது.

91. மேலும், மேம்பட்ட ஆராய்ச்சி அடிப்படையிலான ஆழ்நிலை தொழில்நுட்பப் புத்தாக்கப் பயன்பாட்டை ஊக்குவிக்கவும். ஆழ்நிலை தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனங்களை ஆதரிக்கவும், **'தமிழ்நாடு ஆழ்நிலை தொழில்நுட்பப் புத்தொழில் நிறுவனக் கொள்கை**, நாட்டிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில்தான் வெளியிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டை அறிவுசார் சொத்துரிமைத் தலைநகராக நிறுவிட, **'தமிழ்நாட்டில் புத்தமை அறிவுசார் சொத்துரிமை மாநாடு'** நடத்தப்பட்டது.

92. தமிழ்நாடு தொழில்நுட்ப மையத்தின் (ITNT Hub) சார்பில், 174 ஆழ்நிலை மற்றும்




வளர்ந்துவரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மேலும், புத்தொழில்கள் வழியாக புத்தாக்கம் மற்றும் அனைவருக்குமான வளர்ச்சியை ஊக்குவித்திட, 27 ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்பத் தொழில் வளர்காப்பகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

93. தமிழ்நாட்டில் உள்ள 12,525 கிராமப் பஞ்சாயத்துகளையும் கண்ணாடி இழை கம்பிவடம் மூலம் இணைத்து, அதிவேக அலைக்கற்றை வழங்கும் திட்டப் பணிகள், தமிழ்நாடு கண்ணாடி இழை வலையமைப்பு நிறுவனத்தின் (TANFINET) மூலம், தற்போது 11953 (95 சதவீதம்) கிராம ஊராட்சிகளில் முடிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் வாயிலாக முதலமைச்சர் அவர்கள், 11.10.2025 அன்று 10,000 கிராம ஊராட்சிகளில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டங்களில் இணையவழியில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறைக்கு 219 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### நீர்வளம்

94. நீரின்றி அமையாது உலகு எனும் பேருண்மையை உணர்ந்துள்ள நமது அரசு. நீர் மேலாண்மையை செவ்வனே செயல்படுத்திட கடந்த ஐந்து ஆண்டுகளில், **'ஒருங்கிணைந்த நீர்வள மேம்பாட்டுத் திட்டம்'** உள்ளிட்ட பல அளப்பரிய திட்டங்களை செயல்படுத்தி வந்துள்ளது. புதிய நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை அமைத்தல், நிரந்தர நீர் மேம்பாட்டுத் திட்டங்கள். வெள்ளப் பாதுகாப்பு மற்றும் பாதிப்பைத் தணிப்பதற்கான திட்டங்கள். அணைகள் மேம்பாடு. கடலரிப்பு தடுப்புத் திட்டங்கள் உட்பட நீர் வளங்களை புனரமைத்து மேம்படுத்தும் அனைத்துப் பணிகளுக்கும் கடந்த ஐந்தாண்டுகளில் 17,096 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன.

95. பாசன வசதிக்காக சிறப்பு தூர்வாரும் பணிகள், காவிரி டெல்டா, பரம்பிக்குளம் ஆழியாறு, தாமிரபரணி மற்றும் வைகை உள்ளிட்ட வடிநிலங்களில் 498 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

96. சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் 1,618 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பல்வேறு வடிகால்கள் மேம்படுத்தப்பட்டுள்ளன. மேலும், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில், புயல் மற்றும் கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை தணித்திடும் வகையில், 362 கோடி ரூபாய் செலவில் நிரந்தர வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சென்னை மாநகரின் குடிநீர் வழங்கும் ஆதாரங்களை பெருக்கிடும் வகையில், சென்னைக்கு அருகே திருப்போரூரில் கோவளம் உப வடிநிலப் பகுதியில் 342 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 2.25 டி.எம்.சி. கொள்ளளவு கொண்ட 'மாமல்லன் நீர்த்தேக்கம் என்ற ஒரு புதிய நீர்த்தேக்கத்திற்கு அண்மையில் முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டி உள்ளார்கள்.

97. பல்வேறு நீர் மேலாண்மைத் திட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்திய நீர்வளத் துறைக்கு நீர் மேலாண்மைக்கான 'தேசிய நீர் விருது'. **'உலக பாரம்பரிய நீர்ப்பாசனக் கட்டமைப்பு விருது'**, **'பங்கேற்பு பாசன மேலாண்மை விருது'** உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட உயரிய விருதுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. நீர்வளத் துறைக்கு இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10,076 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### எரிசக்தி

98. எதிர்வரும் ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மின் தேவை தற்போதைய அளவைவிட இரண்டு மடங்கு உயர்ந்திடும் என்ற மதிப்பீட்டின் அடிப்படையில், 100 பில்லியன் யூனிட் கொண்ட புதுப்பிக்கத்தக்க பசுமை ஆற்றலை உருவாக்கும் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டமாக, கன்னியாகுமரி மாவட்டம். வெள்ளிமலைப் பகுதியில் 1000 மெகாவாட் திறன் கொண்ட நீரேற்று மின் திட்டத்தை 5,320 கோடி ரூபாய் முதலீட்டில் பொதுத்துறை தனியார் பங்களிப்புடன் உருவாக்கும் பணிக்கான முதற்கட்ட ஆய்வுகள் நிறைவடைந்துள்ளன. மேலும், நாள் முழுவதும் உறுதியளிக்கப்பட்ட பசுமை மின்சாரம் வழங்கும் நோக்கத்தோடு, இதுவரை மணிக்கு 1000 மெகாவாட் திறன் கொண்ட **'மின்கலன் சேமிப்புத் திட்டங்கள்' (Battery Energy Storage System)** உருவாக்கிட ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. மாநிலத்திலுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை மேம்படுத்துவதற்கென **'புதிய ஒருங்கிணைந்த புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் கொள்கை'** விரைவில் வெளியிடப்படும். எரிசக்தித் துறைக்கு, இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் 18,091 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### சுற்றுச்சூழல்,காலநிலை மாற்றம் மற்றும் வனம்

99. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை குறிப்பிடத்தக்க பல அளவீடுகளை எட்டியுள்ளது. தமிழ்நாடு, **நிதி ஆயோக்கின் (NITI Aayog) நீடித்த வளர்ச்சி இலக்கு குறியீடு, 2023-24 ல்** காலநிலை செயல்பாட்டில் முதல் இடத்தைப் பெற்றது என்பது பெருமைக்குரியது. முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், வலுவான பொருளாதார வளர்ச்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, காலநிலை தாங்குதிறன் மற்றும் நீடித்த நிலையான வளர்ச்சியை ஒருங்கிணைக்கும் வளர்ச்சிப் பாதையில் தமிழ்நாடு வேகமாக முன்னேறி வருகிறது.

100. அந்நிய களைத்தாவரங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மறுசீரமைப்பு குறித்தான கொள்கையினை வகுத்ததன் மூலம், சுற்றுச்சூழல்




மீள்உருவாக்கம் மற்றும் உயிரி பல்வகைமை மேலாண்மையில் நாட்டில் முன்னணி மாநிலமாக தமிழ்நாடு உருவெடுத்துள்ளது. 20 சர்வதேச அங்கீகரிக்கப்பட்ட ஈர நிலங்கள் (Ramsar sites) உள்ளதன் மூலம் இந்தியாவிலேயே அதிக எண்ணிக்கையிலான ராம்சர் தளங்களைக் கொண்டுள்ள தனித்துவமான மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. அவற்றின் நீண்டகால பாதுகாப்பு மற்றும் நிலைத்த மேலாண்மையை உறுதிப்படுத்த, **'தமிழ்நாடு ஈர நிலங்கள்'** இயக்கம் திறம்பட செயல்பட்டு வருகிறது.

101. நீலகிரி வரையாடுகள் திட்டம், தமிழ்நாடு வனம் மற்றும் வனஉயிரின குற்றக் கட்டுப்பாட்டுப் பிரிவு, மனிதவனவிலங்கு மோதலால் ஏற்படும் மனித உயிரிழப்புகளுக்கான இழப்பீட்டுத் தொகையை உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகள், மனித நலனுடன் வனவிலங்கு பாதுகாப்பை சமநிலைப்படுத்துவதற்கான அரசின் உறுதியான பொறுப்பை பிரதிபலிக்கின்றன. இந்த நடவடிக்கைகள், மாநிலத்தின் உயிரின பன்முகத்தன்மையை பாதுகாக்கும் அதே வேளையில், பொறுப்புள்ள, மக்கள் நலன் சார்ந்த அணுகுமுறையை வெளிப்படுத்துகின்றன.

102. கடந்த 2022 ஆம் ஆண்டில், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்கா, இந்திய அரசின் மேலாண்மை செயல்திறன் மதிப்பீட்டு தரவரிசையில் தேசிய அளவில் முதல் இடத்தைப் பெற்றுள்ளதன் மூலம், வனவிலங்கு மேலாண்மையில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதை எடுத்துக்காட்டுகிறது. வனவிலங்குகளைப் பாதுகாக்கும் முயற்சிகளை மேலும் வலுப்படுத்திட தமிழ்நாடு அரசு ஆறு புதிய வனவிலங்கு சரணாலயங்கள். ஒரு கடற்பசு பாதுகாப்பு காப்பகம் மற்றும் ஒரு யானைகள் காப்பகம் ஆகியவற்றை அறிவித்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், தமிழ்நாடு அரசின் முன்முயற்சியான, பாக் வளைகுடாவில் இந்தியாவின் முதல் கடற்பசு பாதுகாப்பு காப்பகம், 2025 ஆம் ஆண்டின் உலக இயற்கை பாதுகாப்பு மாநாட்டில் (WCC) சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியத்தின் (IUCN) அங்கீகாரத்தினைப் பெற்றுள்ளது.

103. தமிழ்நாடு காலநிலை மாற்ற இயக்கத்தின் மூலம், தமிழ்நாடு, காலநிலை ஆளுமையில் இந்திய அளவில் முன்னணி வகிக்கிறது. இவ்வியக்கம். தேசிய மற்றும் சர்வதேச அளவிலான சிறந்த நிபுணர்களைக் கொண்ட ஆட்சிமன்றக் குழுவின் வழிகாட்டுதலின்படி இயங்குகிறது. தமிழ்நாடு அரசு தொடர்ச்சியாக மூன்று காலநிலை உச்சி மாநாடுகளை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இம்மாநாடுகள், காலநிலை தணிப்பு, தகவமைப்பு நடவடிக்கைகள், தேசிய மற்றும் உலக அளவிலான சிறந்த நடைமுறைகளை விவாதிக்கும் உறுதியான தளமாக அமைந்துள்ளது. இம்முயற்சிகளை இணைத்து, **'நெய்தல் மீட்சி இயக்கம்'** மற்றும் தொடர்புடைய திட்டங்களின் கீழ் 3,733 ஹெக்டேர் பரப்பளவில் அலையாத்திக் காடுகள் மீள்உருவாக்கம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கடலோர மீள்திறன் மற்றும் உயிரின பன்முகத்தன்மையை வலுப்படுத்தும்.

இந்நடவடிக்கைகள், தேசிய மற்றும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதோடு. உலக அளவிலான காலநிலை மாற்ற நடவடிக்கைகளுடன் ஒத்திருப்பதாக தேசிய மற்றும் சர்வதேச பங்கேற்பாளர்களான, உலக வங்கி மற்றும் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு முகமை ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

### பசுமை முயற்சிகள்

104.

"Trees are poems the earth writes upon the sky,
We fell them down and turn them into paper,
That we may record our emptiness"

- Kahlil Gibran

**"வானத்தை நோக்கி பூமி வரைந்திடத் துடிக்கும் கவிதைகளே மரங்கள்,**

**எனினும் நாம் மரங்களைச் சாய்த்து நம் வெறுமையினை நிரப்பிட வெறும் காகிதம் செய்யத் துணிகிறோம்"**

உலகப்புகழ் பெற்ற கவிஞர் கலீல் ஜிப்ரான் அவர்களின் பசுமை தோய்ந்த வரிகளை மனதில் தாங்கி, தமிழ்நாடு எங்கும் பசுமைப் பரப்பினை உயர்த்திட இந்த அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது.

**'பசுமை தமிழ்நாடு இயக்கத்தின்'** மூலம் வனம் மற்றும் மரங்களின் பரப்பளவினை அதிகரித்து, தேசிய இலக்கான 33 சதவீதத்தை அடைவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்து ஆண்டுகளில், தமிழ்நாடு முழுவதும் 100 புதிய பாதுகாக்கப்பட்ட காடுகள் அறிவிக்கை செய்யப்பட்டுள்ளது. இது வனத்தின் பாதுகாப்பை வலுப்படுத்துதல், சுற்றுச்சூழல் பாதுகாப்பை மேம்படுத்துதல் மற்றும் சட்டப்பூர்வமாக பாதுகாக்கப்பட்ட நிலப்பரப்புகள் மூலம் காலநிலை மீள்திறனை உருவாக்கும் தொடர்ச்சியான முயற்சிகளில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். வேகமான நகரமயமாக்கல் மற்றும் காலநிலை மாற்றம் ஏற்படுத்தும் சவால்களை எதிர்கொண்டு, நகரமைப்புத் திட்டங்களில் பசுமைப் பரப்பை முறைப்படுத்தும் நோக்கில், தமிழ்நாடு நகர்ப்புர பசுமையாக்கல் கொள்கை2026 அண்மையில் வெளியிடப்பட்டுள்ளது.

105. கோவை செம்மொழிப் பூங்கா 45 ஏக்கர் பரப்பளவில் 208 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், சென்னை கலைஞர் நூற்றாண்டு பூங்கா 1329 ஏக்கர் பரப்பளவில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும் அமைக்கப்பட்டுள்ளதுடன், சென்னை, அடையாறில் உள்ள தொல்காப்பியப் பூங்கா 58 ஏக்கர் பரப்பளவில் 42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைக்கப்பட்டுள்ளது. மேலும், நீலகிரி மாவட்டம் ரேஸ்கோர்ஸ் பகுதி பூங்காவை 5234 ஏக்கர் பரப்பளவில் 70 கோடி ரூபாய் மதிப்பீட்டிலும், கிண்டி ரேஸ்கோர்ஸ் பகுதியில் 118 ஏக்கர் பரப்பளவில் சுற்றுச்சூழல் பூங்காவையும் இந்த அரசு அமைத்து வருகிறது. இத்தகைய பசுமை முயற்சிகள் வாயிலாக, சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுவதுடன், ஏராளமான சுற்றுலாப் பயணிகளும் அப்பகுதி மக்களும் பயனடைந்து வருகின்றனர்.

### போக்குவரத்து

106. நமது நாட்டிலேயே குக்கிராமங்களுக்கும் சென்றடையக்கூடிய சீரான போக்குவரத்துச் சேவையை தமிழ்நாடு அரசுதான் தொடர்ந்து வழங்கி வருகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 6,121 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 12087 புதிய பேருந்துகள் கொள்முதல் செய்திட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் பயன்பாட்டிற்கு உகந்த 3,673 பேருந்துகளை, முற்றிலும் புதுப்பித்து இயக்குவதற்காக 374 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், 380 பசுமை மின் பேருந்துகள் 288 கோடி ரூபாய் மதிப்பீட்டில், போக்குவரத்துச் சேவையில் இணைக்கப்பட்டுள்ளன. அண்மையில், மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட **சிற்றுந்து (Mini Bus)** திட்டம் நகரங்களை ஒட்டிய ஊரகப் பகுதிகளிலும் போக்குவரத்துச் சேவையை வழங்கிடும் வகையில் 1603 புதிய வழித்தடங்களில் வெற்றிகரமாக விரிவாக்கப்பட்டுள்ளது.

107. போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாட்டுத் திறன், சேவை வழங்கல் மற்றும் நிதி நிலை ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக, போக்குவரத்துக் கழகங்களுக்கு சேவை அடிப்படையிலான ஊக்கத்தொகை வழங்கும் நோக்கத்தில், ஊக்க நிதியம் ஒன்று 2000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் மகளிர் விடியல் பயணம் திட்டத்திற்காக 4,000 கோடி ரூபாய், மாணவர்கள் பேருந்துப் பயணக் கட்டணம் திட்டத்திற்காக 1782 கோடி ரூபாய், டீசல் மானியத்திற்காக 1857 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில், போக்குவரத்துத் துறைக்கு 13,062 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 7-ஆம் பக்கம்

# உலகப் புகழ்பெற்ற பல்கலைக் கழகங்கள் தமிழ்நாட்டுக்கு வருகை!